# யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
## முதலாம் தவணைப் பரீட்சை - 2015
### வரலாறு

| தரம் :- 06 | சுட்டெண்:- ........................................... | நேரம்:- 2 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

❖ சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

01) தொல்பொருள் மூலாதாரங்களுள் ஒன்று

1) மகாவம்சம்  2) தீபவம்சம்
3) கல்வெட்டு  4) கர்ணபரம்பரைக் கதைகள்

02) மகா வம்சத்தை எழுதிய ஆசிரியரும் எழுந்த காலமும்

1) முதலாம் பராக்கிரமபாகு, குருணாகல் காலம்
2) மகாநாமதேரர், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு
3) மகிந்ததேரர், அனுராதபுரக் காலம்
4) மகாவீரர், கி. பி 544

03) வரலாற்றில் கிடைக்கும் சிறந்த பயன்பாடுகளுள் ஒன்று

1) அதிக வருமானத்தைப் பெறலாம்
2) இனிதாகப் பொழுதைப் போக்கலாம்
3) இன்றைய சூழல் பிரச்சினையைத் தீர்க்கும் வழிகளைக் கண்டறியலாம்
4) நாணயங்களை அதிகம் சேகரிக்கலாம்.

04) இந்துக்களின் சாலிவாகன சகாப்தம் எப்போது ஆரம்பமாகிறது?

1) கி. பி. 78 ல்  2) கி. மு. 78 ல்  3) கி. பி. 450 ல்  4) கி. மு. 450 இல்

05) முஸ்லீம்கள் பயன்படுத்தும் காலம் அளவிடும் முறை

1) சாலிவாகன ஆண்டு  2) ஹிஜ்ரி ஆண்டு
3) பஞ்சாங்க ஆண்டு  4) முகம்மது (ஸல்) பிறந்த ஆண்டு

06) முற்காலத்தில் "கீழைத் தேசங்களின் தானியக் களஞ்சியம்" என்று அழைக்கப்பட்ட நாடு

1) இலங்கை  2) இந்தியா  3) சீனா  4) யப்பான்

07) உயிர்களைத் தோற்றுவித்த தூசுப்படலம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

1) லாவா  2) மக்மா  3) நிகாரிகா  4) ஓபபீனியா

08) உலகில் தோன்றிய முதலாவது உயிரினம்

1) ஓபபீனியா  2) மரஅட்டை
3) புரோகாபோட் பக்டீரியா  4) வானரம்

09) பெரும்பனி யுகம் நீண்ட குளிர்காலத்தையும், குறுகிய வெப்பக் காலத்தையும் கொண்டிருந்தது. இதில் எந்தக் காலம் உயிரினங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்திய காலமாகும்?

1) குளிர்காலம்
2) வெப்பக் காலம்
3) குளிர் காலத்திற்கும் வெப்பக் காலத்திற்கும் இடைப்பட்ட காலம்
4) பனி யுகத்திற்கு முற்பட்ட காலம்



kalvi.lk

10) மானிட பரிணாமம் என்பது
1) பக்டீரியா தோன்றிய காலம்
2) மனிதன் நெருப்பைக் கண்டறிந்த காலம்
3) கல்லாயுதத்தை மனிதன் பயன்படுத்திய காலம்
4) சிப்பன்சியிலிருந்து மனிதன் முன்னேறிய காலம்

11) மனிதன் மூளை வளர்ச்சியடைந்தமைக்கு முக்கிய காரணம்
1) பனியுகம் முடிவுற்றமை
2) அதிக சிந்தனை
3) அதிக உணவு
4) சனத்தொகை அதிகரித்தமை

12) இலங்கையில் வாழும் ஹோமே சேபியன் இனத்தவர்
1) கொக்க சொயிட்
2) நிக்ரொயிட்
3) ஒஸ்ரிலொயிட்
4) மொங்கோ லொயிட்

13) இன்று பல பிரதேசங்களிலும் வாழும் மக்களின் தோற்றத்தில் வேறுபாடு காணப்படுவதற்கான முக்கிய காரணம்
1) உணவு வேறுபாடு
2) வருமான வேறுபாடு
3) காலநிலை வேறுபாடு
4) தொழில் வேறுபாடு

14) இடைக் கற்காலத்தில் குடிசையில் வாழ்ந்த மனிதனின் குடும்பத்தில் சுமார் எத்தனை பேர் அங்கம் வகித்தனர்?
1) 5 - 10 பேர்
2) 10 - 20 பேர்
3) 20 - 30 பேர்
4) 30 - 40 பேர்

15) இலங்கையில் வாழ்ந்த கற்கால மனிதன், எலும்புகளுக்கு நிறம் பூசப் பயன்படுத்தியது?
1) ஒரு வகை விதையை
2) ஒரு வகை இலையை
3) இயற்கை கல்லை (நிறக் கற்கள்)
3) சிவப்பு நிற மண்ணை

16) பெரும்பனி யுகம் முடிவுற்ற காலம்
1) இற்றைக்கு 5, 000 ஆண்டுகளுக்கு முன்பு
2) இற்றைக்கு 12, 000 ஆண்டுகளுக்கு முன்பு
3) 20, 000 ஆண்டுகளுக்கு முன்பு
4) 38, 000 ஆண்டுகளுக்கு முன்பு

17) விதைகளை இடிக்கப் பயன்படுத்திய வட்டமான கற்களை மனிதன் எப்பகுதியிலிருந்து பெற்றுக் கொண்டான்?
1) நீர் பாய்ந்து செல்லும் பகுதி
2) கற்குகை
3) மலைப்பகுதி
4) காட்டுப் பகுதி

❖ A - தரையில் தாவரங்கள் தோன்றியமை
B - கடலில் உயிரினங்கள் தோன்றியமை
C - தரையில் மிருகங்கள் தோன்றியமை
D - மனிதன் தோன்றியமை

18) மேற்குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் முதலாவதாக நடந்த நிகழ்வு
1) A
2) B
3) C
4) D

19) இறுதியில் நடந்த நிகழ்வு
1) A
2) B
3) C
4) D

20) 3 வதாக நடந்த நிகழ்வு
1) A
2) B
3) C
4) D

(20 × 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

❖ 1ம், 2ம் வினா கட்டாயமானது. ஏனையவற்றுள் எவையேனும் 3 வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை தருக.

01) 1ம் தவணைக்காக வரலாற்றுப் பாடத்தில் உமக்குத் தரப்பட்ட கணிப்பீட்டுச் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு

i) வரலாறு பாடத்தில் உம்மால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகள் எவை?

ii) கணிப்பீடு செயற்பாட்டினை எவ் அலகுகளில் மேற்கொண்டீர்?

iii) அவ் ஒப்படைச் செயற்பாட்டினை மேற்கொள்ளும் போது நீர் எதிர்நோக்கிய பிரச்சினைகள் 2 தருக.

iv) ஒப்படைச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு நீர் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் எவை?

v) இவ் கணிப்பீட்டுச் செயன்முறையின் மூலம் உமக்குக் கிடைத்த நன்மைகள் 2 தருக.

(2 + 2 + 4 + 4 + 3 = 15 புள்ளிகள்)

02) கீழே தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் குறிக்கப்பட்டுள்ள இடங்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

i) மகாவலி கங்கை ( )

ii) யாழ்ப்பாணம் ( )

iii) மட்டக்களப்பு ( )

iv) மல்வத்ஓயா ( )

v) கண்டி ( )

vi) புத்தளம் ( )

vii) கொழும்பு ( )

viii) கதிர்காமம் ( )


ix) கோகர்ண ( )

x) காலி ( )

xi) கலாஓயா ( )

xii) அநுராதபுரம் ( )

(1 × 12 = 12 புள்ளிகள்)




Education கல்வி

03)

i) வரலாறு என்றால் என்ன?

ii) வரலாற்று மூலாதாரங்களை வகைப்படுத்தி அவற்றுக்கு உதாரணங்கள் தருக.

iii) வரலாற்றைக் கற்பதால் கிடைக்கும் பயன்கள் 2 இனை விளக்குக.

(3 + 4 + 5 = 15 புள்ளிகள்)



kalvi.lk

04)

i) இன்று வரலாற்றுக் காலத்தை அறிய உதவும் 4 முறைகளைத் தருக.

ii) பின்வரும் வரலாற்று நிகழ்வுகளை புத்த வருடத்தில் தருக.

a. புத்தர் பரிநிர்வாணமடைந்தமை

b. இயேசு நாதரின் பிறப்பு

iii) எமது வாழ்க்கையோடு தொடர்புடைய விடயங்களை பின்வரும் விடயங்களை எவ்வாறு அறிந்து கொள்வீர்கள்?

a. எங்கள் ஊரில் முதலில் அமைக்கப்பட்ட வைத்தியசாலை

b. எங்கள் பாடசாலை நிர்மாணிக்கப்பட்ட விதம்

(3 + 4 + 5 = 15 புள்ளிகள்)

05)

i) புவியில் உயிர்கள் வாழ்வதற்கு உதவும் காரணிகள் 3 தருக.

ii) நீரிலும் நிலத்திலும் முதலில் தோன்றிய உயிரினங்கள் பற்றி விளக்குக.

iii) நெருப்பைக் கண்டுபிடித்ததனால் மனிதன் அடைந்த பயன்களைத் தருக.

(3 + 4 + 5 = 15 புள்ளிகள்)

06)

i) மனிதன் அடைந்த கலாசார வளர்ச்சியை எவ்வாறு கட்டங்களாக வகைப்படுத்தலாம்?

ii) ஹோமோ சேபியன் மனித இனத்தின் பிரதான பிரிவுகள் நான்கும் எவை?

iii) a. மனிதனின் பரிணாம வளர்ச்சிக் கட்டங்களை வரிசைப்படுத்துக.

b. இடைக்கற்காலத்தில் மனிதனது வாழ்வில் ஏற்றபட்ட முன்னேற்றங்கள் எவை?

(3 + 4 + 5 = 15 புள்ளிகள்)



kalvi.lk




Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457